<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>
<u>ஸ்ரீவில்லிபுத்தூர்</u>

**OS.No: 1/2021** **நாள் 26.02.2026.**

**வாசா.1 , திருமதி.வெள்ளைத்தாய்**

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 1ம் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

நான் இல்லத்தரசி. இவ்வழக்கின் 1ம் எதிர்வாதியானவர் என் தங்கை . பிராது சொத்துக்கள்அனைத்து வாதிகளாகிய எங்களுக்கும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் கூட்டாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். என் தாயார் பெயர் பேச்சியம்மாள். என் தாயார் 24.08.2020ம் ஆண்டு இறந்துபோனார். என் தாயாருக்கு ஏற்கனவே புற்றுநோய் இருந்து அதனால் இடதுபக்க மார்பகத்தை அகற்றிவிட்டார்கள். 2020ம் ஆண்டு கொரோனா காலகட்டத்தில் என் தாயாருக்கு மூச்சு திணறல் ஏற்பட்டு அதனால் காலமானார். வழக்கில் உள்ள 3ம் எதிர்வாதியான என் மற்றொரு சகோதரி லிங்க பவாணி என்பவர் எனக்கு எதிராக அ.வ.எண்.129/2000 என்ற பாக வழக்கை ஸ்ரீவில்லிபுத்தூர் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். அந்த வழக்கில் ஏற்பட்ட சமரச தீர்ப்பாணையின் படி நாங்கள் வழக்கின் பரிகாரத்தை முடித்துக்கொண்டோம். அதன்படி பிராது 2ம் அயிட்ட சொத்தானது என் தாயார் பேச்சியம்மாளுக்கும் 3ம் அயிட்ட சொத்தானது வாதிகளாகிய எங்களுக்கும் 1 முதல் 3 எதிர்வாதிகளுக்கும் ஒதுக்கப்பட்டது. என் தாயார் இறந்த பின்பு பிராது 2ம் அயிட்ட சொத்தானது பொதுக்குடும்ப சொத்தாக மாறியது என்றால் சரிதான். பிராது 2ம் அயிட்ட சொத்தானது 1973ம் ஆண்டு என் தாத்தா நீராத்தலிங்கம் என்பவர் என் தந்தை நீராத்தலிங்கம் பெயரில் கிரையம் வாங்கினார். அந்த கிரைய ஆவணத்தின் அசல் என்னிடத்தில காண்பிக்கப்படுபவை என்றால் சரிதான். அது **பிவாசாஆ.1**. பிராது சொத்துக்களை 1ம் எதிர்வாதியானவர் மோசடியாக அவர் பெயருக்கு ஆவணங்களை உற்பத்தி செய்துகொள்ள முயற்சிப்பதாக நாங்கள் பிராதில் சொல்லியுள்ளோம் என்றால் சரிதான் அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். பிராது 1, 2 லக்க சொத்துக்களில் வாதிகளாகிய எங்கள் இருவருக்கும் தலா 2/5 பங்கு பாகமும் , பிராது 3வது இலக்க சொத்தில் 2/4 பாகம்பங்கு பாகமும் உள்ளதாக சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். அதுபோல் பிராது 1, 2 லக்க சொத்துக்களில் வழக்கின் 1ம் எதிர்வாதியான என் தங்கை உஷாராணிக்கு 1/5 பங்கு பாகமும் பிராது

3 வது லக்க சொத்தில் 1/4 பங்கு பாகமும் உள்ளது என்றால் சரிதான். என் தங்கை 1ம் எதிர்வாதியானவர்மேற்கண்ட வகையில் தனக்குரிய பாகத்தை சொல்லி அதனை பிரித்து தரவேண்டி 1ம் எதிர்வாதியானவர் எதிர்பாத்திய கோருரிமையை தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் அது சரிதான். எனவே 1ம் எதிர்வாதியான என் தங்கை தாக்கல் செய்திருந்த கோருரிமைய பாத்தியதை அனுமதிக்கவும் அவருக்குரிய பாகத்தை பிரித்துகொடுப்பதிலும் எனக்கு ஆட்சேபனை இல்லை.

**(குறுக்குவிசாரணை 2 மற்றும் 3 எதிர்வாதிகள் தரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 26th day of February 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.